# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் ஆகஸ்ட் மாத சாதாரணக்கூட்டம் 28.08.2020 ஆம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது.

## பொருள் எண்.1

இந்நகராட்சிக்குட்பட்ட மாதா காலனி பகுதியில் க.எண்.65/60G-ன் அருகில் நடைபாதைக்காக அமைக்கப்பட்ட காங்கிரீட் தளத்தை விட சைமன்காலனி பிரதான சாலை உயரமாக உள்ளதால், மழை காலங்களில் மழைநீர் தேங்கி சுகாதார கேடு ஏற்படுவதால், மேற்படி பகுதியில் தேங்கும் மழைநீரை ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள வடிகால் ஓடையில் கொண்டு செல்லும் வகையில், மாதா காலனி அருகில் சைமன்காலனி பிரதான சாலையில் ரூ.4,20,000/- மதிப்பீட்டில் புதிதாக வடிகால் ஓடை மற்றும் பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.843/2020/இ1

**தீர்மானம் எண்.2332 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.2

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24-ல் சிங்கன்காவு JSR Gas Godown அருகில் செல்லும் வடிகால் ஓடையில் மழைக்காலங்களில் அதிகளவு மழைநீர் பாய்வதால், வடிகால் ஓடையின் தரைதளம் மிக மோசமாக பழுதடைந்தும், சுவர் பகுதி இடிந்துள்ளதால், சாலையின் ஓரங்கள் உடைந்து வடிகால் ஓடையின் உட்புறம் விழுந்துள்ளது. இதனால் கழிவு நீர் தேங்கி சுகாதார கேடு ஏற்படும் நிலை உள்ளதுடன், வடிகால் ஓடையின் மேல் மூடி உடைந்துள்ளதால், பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் மிகுந்த இடையூறு ஏற்பட்டு வருகிறது. எனவே பொது நலன் கருதி மேற்படி பகுதியில், வடிகால் ஓடை அமைப்பதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.8,50,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.874/2020/இ1

**தீர்மானம் எண்.2333 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.3

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4-ல் ஆசாந் நகர் சாலையில் (கிராம நிர்வாக அலுவலகம் பின்புறம்) அமைந்துள்ள வடிகால் ஓடையின் பக்க சுவர்கள் இடிந்து ஓடையின் உட்புறம் விழுந்துள்ளதால், கழிவு நீர் சீராக செல்ல முடியாமல் துர்நாற்றம் வீசி வருகிறது. இதனால் பொது சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை உள்ளது. மேலும் மழைக்காலங்களில் வடிகால் ஓடையில் தேங்கியுள்ள கழிவு நீர் மற்றும் மழைநீர் சாலையின் மேற்பரப்பில் பாய்ந்து செல்வதால் சாலைப்பகுதியும் சேதமடைந்து காணப்படுகிறது. எனவே பொது சுகாதார நலன் கருதி, மேற்படி பகுதியில் வடிகால் ஓடை மற்றும்

சாலையினை சீரமைப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.5,20,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.873/2020/இ1

**தீர்மானம் எண்.2334 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.4

இந்நகராட்சி குடிநீர் லாரி TN 74 Z 5304-ன் பழுதடைந்த டேங்க் பகுதி முழுவதையும் மாற்றி 3 எம்.எம் கனத்தில் பிளேட் (3mm Thickness Plate) வைத்து தண்ணீர் கசிவதை சரி செய்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக, பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | M/s.Mathava Motors,<br>Christ Nagar,Main Road<br>Vellamadam | Rs.90.552/-<br>(including GST 18%) |
| 2. | M/s.Akshaya Motor Works,<br>Kulasekharam Road,<br>Unnamalai Kadai (P.o) | Rs.1,30,980/-<br>(including GST 18%) |
| 3. | M/s.Ganesh Motor Works,<br>6B1, Sasthancoil Street,<br>Puthukudieurppu, Vadasery,<br>Nagercoil | Rs.1,30,390/-<br>(including GST 18%) |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில், M/s.Mathava Motors, Vellamadam நிறுகூனம் அளித்துள்ள விலைப்புள்ளி குறைவானது. எனவே மேற்படி குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.5754/2010/இ1

**தீர்மானம் எண்.2335 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.5

இந்நகராட்சி கணணி வசூல் மையத்தில் பயன்பாட்டில் உள்ள நோட்டு எண்ணும் இயந்திரம் (Cash Counting Machine) பழுதடைந்துள்ள காரணத்தால், மேற்படி இயந்திரத்திற்கு மாற்றாக புதிய இயந்திரம் வாங்கும் பொருட்டு, அவசர அவசியம் கருதி, பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | M/s.Sri Vignesh Electronics Safety systems<br>26, Vanchiathithen New street,<br>Vadasery. | ரூ.16,500/- |

| | | |
|---|---|---|
| 2. | M/s.Ramya systems,<br>46. Nanjil Nagar, Ramanputhoor,<br>Nagercoil | ரூ.18,500/- |
| 3. | M/s.Ravi Systems,<br>26. Thalavai street,<br>Meenakshipuram, Nagercoil-1 | ரூ.18,000/- |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில், M/s.Sri Vignesh Electronics Safety systems, Vadasery நிறுவனம் அளித்துள்ள விலைப்புள்ளி குறைவானது. எனவே மேற்படி குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு வினியோக உத்தரவு வழங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.854/2020/இ2

**தீர்மானம் எண்.2336 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.6

இந்நகராட்சி குடிநீர் வினியோகத்திற்காக பயன்பாட்டில் உள்ள வால்வுகளில், கீழ்காணும் பகுதிகளில் உள்ள வால்வுகள் பழுதடைந்துள்ளதால், பொது மக்களுக்கு குடிநீர் வினியோகம் செய்வதில் சிரமம் ஏற்பட்டு வருகிறது.

| வ.எண் | வால்வு விவரம் | வால்வு அமைந்துள்ள இடம் | பழுது எண்ணிக்கை |
|---|---|---|---|
| I | 3'' சுவிஸ் வால்வு | 1. சிங்காரவேலர் காலனி மேல்நிலை நீர்தேக்க தொட்டி அருகில். | 2 |
| | | 2. குழந்தை இயேசு காலனி கீழ் பகுதி | 1 |
| | | 3. கொட்டில்பாடு | 2 |
| | | 4. கே.எஸ்.எஸ்.எஸ் காலனி (க.எண்.4-738 அருகில்) | 1 |
| | | 5. இலப்பவிளை (க.எண்.20-80B அருகில்) | 1 |
| | | 6. ஏசுதாஸ் காலனி | 1 |
| | | 7. மாதா காலனி (பெட்ரோல் பங்க் அருகில்) | 1 |
| | | 8. துறைமுகத்தெரு | 1 |
| | | 9. கீழத்தெரு | 1 |
| | | 10. யானைக்கால் மருந்தகம் அருகில் | 1 |
| | | 11. செக்காலத்தெரு | 1 |
| | | **மொத்தம்** | **13** |
| II | 4'' சுவிஸ் வால்வு | 1. குளச்சல் கோயில் அருகில் | 1 |
| | | 2. கே.எஸ்.எஸ்.எஸ்.காலனி | 1 |
| | | 3. சுடலைமாடன் கோயில் முன்புறம் (மெயின் ரோடு) | 1 |
| | | 4. புல்லன்விளை திருப்பு | 1 |
| | | 5. மெயின் ரோடு (ஆட்டோ நிறுத்துமிடம் திருப்பு) | 1 |

| | | | |
|---|---|---|---|
| | | 6. மார்க்கெட் பின்புறம்<br>7. காந்தி சந்திப்பு<br>8. தும்பக்காடு (க.எண்.2-15 அருகில்)<br>9. பொட்டல் (க.எண்.2-236A அருகில்)<br>10. பர்னட்டிவிளை<br>(க.எண்.2-198/1 அருகில்)<br>11. மெயின் ரோடு (சுகந்தம் மண்டபம்)<br>12. சீம்பிளிவிளை (F II/63)<br>13. வி.கே.பி பள்ளிக்கூடம் அருகில்<br>**மொத்தம்** | 1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1<br>1<br>**13** |
| IV | Air valve | 1. பர்னட்டிவிளை (5" double)<br>2. கடற்கரை திருப்பு (4" double)<br>**மொத்தம்** | 1<br>1<br>**2** |
| III | பேனல் போர்டு | | **5** |

எனவே மேற்காணும் 3'',4'' சுவிஸ் வால்வுகள் மற்றும் Air Valves பழுதடைந்துள்ளதற்கு மாற்றாக புதிய வால்வுகளை மேற்காணும் இடங்களில் பொருத்துவதற்கு ஏதுவாக புதிய வால்வுகள் வாங்குவதற்கும், 3 Phase Panel Board 5 எண்ணம் வாங்கி இருப்பில் வைப்பதற்கும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.4,10,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.894/2020/இ1

**தீர்மானம் எண்.2337 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.7

இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களின் Roc.No.276/2020/A2 நாள் 18.08.2020-ன் படி, 2020-2021 ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சியிலிருந்து செலுத்த வேண்டிய பங்குத் தொகை ரூ.50,000/- ம் செலுத்த தெரிவிக்கப்பட்டது. எனவே தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு பங்குத் தொகை ரூ.50,000/-ம் செலுத்த மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1542/2001/அ1

**தீர்மானம் எண்.2338 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.8

இந்நகராட்சிக்குட்பட்ட முண்டன்பிலாவடிவிளை பகுதியில், குடிநீர் வினியோகம் சீராக இல்லாத காரணத்தால், பொது மக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டு வருகிறது. எனவே பொது மக்கள் நலனை கருத்தில் கொண்டும், குடிநீர் பணியின் முக்கியத்துவம் கருதியும், காந்தி சந்திப்பு முதல் களிமார் முண்டன்பிலாவடிவிளை வரை 90 mm PVC குடிநீர் குழாய் புதிதாக அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்காக மதிப்பீடு ரூ.1,80,000/-க்கு தயார் செய்யப்பட்டு, மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.தேவராஜ். ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 2.38% அதிகம் (ரூ.1,58,657/-) |
| 2. | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.28% குறைவு (ரூ.1,54,527.70/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.28% ஒப்பந்தப்புள்ளி குறைவானது. எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும், மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.798/2020/இ2

**தீர்மானம் எண்.2339 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.9

இந்நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்கள். 33 முதல் 37 மற்றும் 60 முதல் 64, வரிவிதிப்பு எண்.148/2009006-ன் படி, BSNL நிறுவனத்திற்கு 2009-ல் முன்வைப்புத் தொகை இல்லாமல் வாடகைக்கு விடப்பட்டது. தற்போது BSNL நிறுவனத்தின் கடிதம் எண்.No.B-38/SDE-COC/VOL-I/2020/12 at Nagercoil dated the 01.06.2020-ன் படி, 31.07.2020-ல் மேற்படி கடைகளை இந்நகராட்சி வசம் ஒப்படைத்துள்ளனர். மேற்படி கடைகள் கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்தில் முதல் தளத்தில் அமைந்துள்ளதால், குத்தகைக்கு விடும் பொருட்டு கடை எண்கள். 33 முதல் 37 மற்றும் 60 முதல் 64 ஆகிய கடைகளுக்கு முன்வைப்புத் தொகையாக ரூ.50,000/- வீதம் நிர்ணயம் செய்ய மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.01/2020/அ3

**தீர்மானம் எண்.2340 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.10

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN 74 V 3530-ல் பொருத்தப்பட்டிருந்த மின்கலம் பழுதடைந்து, வாகனத்தை இயக்க இயலாத நிலை ஏற்பட்டதால், அலுவலகப் பணிகளில் மேற்படி வாகனத்தில் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, பழுதடைந்த மின்கலத்திற்கு மாற்றாக புதிய மின்கலம் வாங்கி பொருத்தும் பணியினை நகராட்சி சட்ட விதி பிரிவு 15-ன் கீழ், மேற்கொண்டு அதற்கான செலவினம் ரூ.6300/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கியுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.5030/2020/இ1

**தீர்மானம் எண்.2341 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.11

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய கடை எண்கள்.10,17,18,22,27,36,37,39 கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்கள். 38,39,40,47 முதல் 52,57 முதல் 59 மற்றும் கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண்கள்.25,32 ஆகிய கடைகளுக்கு 27.08.2020-ல் பொது ஏலம் நடைபெற்றது. ஏலத்தில் கலந்து கொண்ட ஏலத்தாரர் பெயர் மற்றும் ஏல விபரம் பின்வருமாறு,

**காமராஜர் பேருந்து நிலைய கடை எண்.27**

| வ.எண். | ஏலத்தாரர் பெயர் | கடை எண். | கேட்கப்பட்டுள்ள ஏலக்கேள்வி மாதம் ஒன்றுக்கு (GST தவிர) | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மற்றும் ஏலத்தாரரின் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | S.சுரேஷ் | 27 | 2500/- | 25,00/- (S.சுரேஷ்) |

மேற்படி கடைக்கு ஒரே ஒரு நபர் மட்டுமே ஏலத்தில் கலந்து கொண்டார். ஒப்பந்தப்புள்ளி எவரும் அளிக்கவில்லை. கடை எண்.27-க்கு 18-வது ஏலம் ஆகும்.

கலம் (5)-ல் கொடுக்கப்பட்டுள்ள ஏலக்கேள்வியை மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் ஏலம் போகாத கடைகளை மறு ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.01/2020/அ3

**தீர்மானம் எண்.2342 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.12

இந்நகராட்சிக்கு சொந்தமான நவீன மீன்சந்தை தரைதள கடை எண்.3,4,7,8 முதல் தளம் கடை எண்.1,7 ஆகிய கடைகளுக்கு 27.08.2020-ல் பொது ஏலம் நடைபெற்றது. ஏலத்தில் கலந்து கொண்ட ஏலத்தாரர் பெயர் மற்றும் ஏல விபரம் பின்வருமாறு,

**நவீன மீன்சந்தை தரைதளம் கடை எண்.8**

| வ.எண். | ஏலத்தாரர் பெயர் | கடை எண். | கேட்கப்பட்டுள்ள ஏலக்கேள்வி மாதம் ஒன்றுக்கு (GST தவிர) | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மற்றும் ஏலத்தாரரின் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | **M.கிப்ஷன்** | 8 | 11000/- | 11000/- (**M.கிப்ஷன்**) |

முதல் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. மேற்படி கடைக்கு ஒரே ஒரு நபர் மட்டுமே ஏலத்தில் கலந்து கொண்டனர். ஒப்பந்தப்புள்ளி எவரும் அளிக்கவில்லை.

கலம் (5)-ல் கொடுக்கப்பட்டுள்ள ஏலக்கேள்வியை மன்றத்தின் பார்வைக்கும் மற்றும் ஏலம் போகாத கடைகளை மறு ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.216/2017/அ1

**தீர்மானம் எண்.2343 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.13

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத் தீர்மானம் எண்.2312 நாள் 30.06.2020-ன் படி, ஜுலை 2020 முதல் செப்டம்பர் 2020 வரை மூன்று மாதங்களுக்கு மன்ற அனுமதி பெற்று உத்தரவு வழங்கப்பட்டிருந்தது. மேலும் அரசு முதன்மை செயலாளர், சென்னை அவர்களது ஆய்வுக்கூட்ட அறிக்கை நாள் 23.11.2017 (ம) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.2571/2017/J1 நாள் 23.04.2018-ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி 2020-2021 ஆம் ஆண்டிற்கு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.A1/9953/2020 நாள் 14.07.2020-ன் படி, தினக்கூலி பணியாளர்களுக்கான ஊதியம் ரூ.615/-ல் DBC பணியாளர்களுக்கான பகுதி நேரம் பணிபார்த்ததற்கான ஊதியம் ஒரு நாளைக்கு ரூ.300/- வீதம் 17 பணியாளர்களுக்கு ஆகஸ்ட் 2020 (ம) செப்டம்பர் 2020 மாதங்களுக்கு வழங்குவதற்கும், அதற்கான செலவின தொகை ரூ.2,70,000/- இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1182/2017/எச்1

**தீர்மானம் எண்.2344 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.14

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தின் கட்டிடப்பகுதி, நடைபாதை மற்றும் மேற்கூரை தரைப்பகுதி ஆகியவை மிக மோசமாக பழுதடைந்துள்ளதால், மேற்படி பகுதிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்காக மதிப்பீடு ரூ.7,70,000/-தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதியும் Lock Period-க்குள் மேற்படி பணிகளை பொது மக்கள் மற்றும் போக்குவரத்திற்கு எவ்வித இடையூறுமின்றி மேற்கொண்டு முடிப்பதற்கு ஏதுவாகவும், மன்ற அனுமதி எதிர்நோக்கி 28.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.02% அதிகம்<br>(ரூ.6,67,175.49/-) |
| 2. | திரு.சி.தேவராஜ்.<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.06% குறைவு<br>(ரூ.6,66,589.36/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.தேவராஜ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.06% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும், மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.896/2020/இ1

**தீர்மானம் எண்.2345 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.15

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தை வளாகத்தில் இயங்கும் மீன் விற்பனை கூடத்தில் பகல் நேரங்களில் வெயில் கடுமையாக அடிப்பதால், மீன் வியாபாரிகளின் மீன்கள் கெட்டு போவதுடன், பொது மக்களும் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். எனவே பொது நலன் கருதி, மீன் விற்பனை கூடத்தில் நிழற் பந்தல் (Shed) அமைக்கவும், பேருந்து நிலையத்திலிருந்து மீன் விற்பனை கூடத்திற்கு செல்லும் பாதையை அடைக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.2,40,000/-க்கு தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி, மன்ற அனுமதியை எதிர்நோக்கி 28.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.சந்திரசேகர்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.12% அதிகம்<br>(ரூ.2,06,534.13/-) |
| 2. | திரு.எஸ்.ஜாண்றோஸ்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.03% குறைவு<br>(ரூ.2,06,213.44/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.03% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.895/2020/இ1

**தீர்மானம் எண்.2346 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.16

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16-ல் நெசவாளர் குறுக்கு தெரு, சுந்தர் அச்சகம் அருகில் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைப்பதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3,20,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும், மன்றம் தனது தீர்மானம் எண்.2294 நாள் 23.06.2020-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிககு 26.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சி.தேவராஜ்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.01% அதிகம்<br>(ரூ.2,72,768.24/-) |
| 2. | திரு.சி.சந்திரசேகர்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.11% குறைவு<br>(ரூ.2,73,119.37/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.தேவராஜ் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே மேற்காணும் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.619/2020/இ1

**தீர்மானம் எண்.2347 அனுமதிக்கப்படுகிறது.**

## பொருள் எண்.17

இந்நகராட்சிக்குட்பட்ட சிங்காரவேலர் காலனி பகுதியில், ஏ.வி.எம் கால்வாய் குறுக்கே பழுதடைந்த நிலையில் உள்ள பாலத்தில் தற்காலிகமாக பழுதுகளை சரி

செய்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2,80,000/-க்கும் மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும், மன்றம் தனது தீர்மானம் எண்.2309 நாள் 30.06.2020-ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிகளுக்கு 26.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.02% குறைவு (ரூ.2,30,288.60/-) |
| 2. | திரு.சி.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.10% அதிகம் (ரூ.2,30,563.64/-) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திருஎஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். எனவே மேற்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.693-1/2020/இ1

**தீர்மானம் எண்.2348 அனுமதிக்கப்படுகிறது.**